www.Padasalai.Net www.TrbTnpsc.com

B

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## எட்டாம் வகுப்பு

நேரம் : 2.30 மணி தமிழ் மதிப்பெண்கள் : 100

பகுதி - I (வேலூர் மாவட்டம்)

15×1=15

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:-

1. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ______
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

2. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ______
அ) பாரதிதாசன் ஆ) தந்தைபெரியார்
இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

3. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ______
அ). இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

4. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு
அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

5. செஞ்சொல் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ______
அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

6. சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ______
அ) வேற்றுமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

7. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம்
அ) திருச்சி ஆ) மதுரை இ) சென்னை ஈ) கோவை

8. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ______
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

9. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ______ எல்லாம் முளைத்தன
அ) சத்துகள் ஆ) முத்துகள் இ) பித்துகள் ஈ) வித்துகள்

10. கீழ்காணும் சொற்களில் பெயரெச்சம்
அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த

11. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ______
அ) அமராவதி ஆ) காவிரி இ) பவானி ஈ) நொய்யல்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

12) இப்பாடல் இடம்பெற்ற நூல்

அ) பெரியபுராணம் ஆ) தொல்காப்பியம்

இ) கலித்தொகை ஈ) இராவண காவியம்

13) வளி என்பதன் பொருள்

அ) மரம் ஆ) காற்று இ) உடல் ஈ) உறவினர்

14) நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஆகிய ஐந்தும் _____ என்ற தொகைச் சொல்லால் குறிக்கப் பெறும்

அ) ஐம்புலன் ஆ) ஐம்பொறி இ) ஐந்திறம் ஈ) ஐம்பூதம்

15) இப்பாடலை இயற்றியவர்

அ) ஔவையார் ஆ) தொல்காப்பியர் இ) மருதனார் ஈ) குடபுலவியனார்

## பகுதி - 2

### பிரிவு - 1

எவையேனும் நான்கனுக்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:- 4×2=8

(21 கட்டாய வினா)

புத்தக பக்கம் எண்

7 — 16) உலகம் எவற்றால் ஆனது? கு-1

45 — 17) சான்றோர்க்கு அழகாவது எது? கு-1

146 — 18) சோழனின் யானைப்படையைக் கண்ட வீரரின் செயல்கள் யாவை? கு-3

132 — 19) கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை? கு-2

149 — 20) பகத்சிங் கண்ட கனவு யாது? கு-1

118 — 21) 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக. pg-118 (குறள்-2)

### பிரிவு - 2

எவையேனும் ஐந்துவினாக்களுக்கு குறுகிய விடையளிக்க:- 5×2=10

19 — 22) எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன? சி-1

65 — 23) எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? சி-1

163 — 24) சந்திப்பிழை என்றால் என்ன? சி-1

21 — 25) சரியான மரபுச் சொல்லால் நிரப்புக?

அ) பால் பருகு (குடி/பருகு) ஆ) பூ கொய் (கொய்/பறி)

142, 166 — 26) கலைச்சொல் தருக. அ) Thread நூல் ஆ) Tax – வரி

41 — 27) காடு மிகவும் அழகானது (உணர்ச்சித் தொடராக மாற்றுக) → என்னே, காட்டின் அழகு!

141 — 28) மரபுத் தொடர் பொருளை எழுதுக? கானல் நீர். → இருப்பது போல் தோன்றும் ஆனால் இராது.

## பகுதி - 3

### பிரிவு - 1

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:- 2×3=6

103 — 29) மூங்கிலால் செய்யப்படும் பொருட்கள் குறித்து எழுதுக? சி-2

78 — 30) தமிழ்வழிக்கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக? சி-1

(31) பத்தியைப் படித்து பதில் தருக?

131 → (அ) மாங்கனி நகரம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது சேலம். இம்மாவட்டத்தில் (ஆ) நெல், பருப்பு வகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி, பாக்கு ஆகியன பயிரிடப்படுகின்றன. இந்தியாவிலேயே இம்மாவட்டத்தில்தான் ஜவ்வரிசி (இ) அதிகஅளவு உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம் இதுவே.

(அ) சேலம் நகரத்தின் சிறப்பு பெயர் என்ன? → மாங்கனி நகரம்

(ஆ) சேலம் மாவட்டத்தில் பயிரிடப்படும் பயிர்கள் யாவை? → நெல், பருப்பு வகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி, பாக்கு.

(இ) இம்மாவட்டத்தில் அதிக அளவு உற்பத்தி செய்யப்படும் பொருள் யாது? → ஜவ்வரிசி

## பிரிவு - 2

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:- (34கட்டாய வினா) 2×3=6

132 — (32) கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை? சி - 1

73 — (33) புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை? சி - 1

50 — (34) "உடலின்" - எனத் தொடங்கி "பெறுவாயே" என முடியும் பாடலை அடிமாறாமல் எழுதுக? (வருமுன் காப்போம்)

## பிரிவு - 3

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:- 2×3=6

65 — (35) வினையெச்சத்தின் வகைகளை விளக்குக? சி - 4

114 — (36) அன்மொழித் தொகையைச் சான்றுடன் விளக்குக? — சி 3

140 — (37) இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக? – சி - 1

## பகுதி - 4

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:- 5×5=25

29 ← (38) கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை? சி - 2

(அல்லது)

52 ← உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக? சி - 1

41 ← (39) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

(அல்லது)

← உங்கள் பகுதியில் ஏற்பட்டுள்ள சாலைப் பழுதை நீக்குமாறு நகராட்சித் தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக?

141 ← (40) பின்வரும் மரபுத் தொடர்களைப் பொருளோடு பொருத்துக?

| | | |
|---|---|---|
| (அ) ஆயிரங்காலத்துப்பயிர் | - | இயலாத செயல் – 2 |
| (ஆ) கல்லில் நார் உரித்தல் | - | ஆராய்ந்து பாராமல் – 5 |
| (இ) கம்பி நீட்டுதல் | - | இருப்பதுபோல் தோன்றும்: ஆனால் இருக்காது – 4 |
| (ஈ) கானல் நீர் | - | நீண்டகாலமாக இருப்பது – 1 |
| (உ) கண்ணை மூடிக்கொண்டு | - | விரைந்து வெளியேறுதல் - 3 |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41) வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக?

அ) போனான் ஆ) வருக இ) கேட்டார் ஈ) சென்றனர் உ) பேசினாள்

42) பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக?

1) இடி _____ மழை வந்தது

2) மலர்விழி தேர்வின் _____ ஆயத்தமானாள்

3) அருவி மலையில் _____ வீழ்ந்தது.

4) தமிழைக் _____ சுவையான மொழியுண்டோ!

5) யாழ், தமிழர் _____ இசைக் கருவிகளுள் ஒன்று

(கொண்டு, இருந்து, உடைய, காட்டிலும், ஆக, நின்று, உடன், விட, பொருட்டு)

## பகுதி - 5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:-** **3×8=24**

43) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக?

44) 'காலம் உடன் வரும்' - கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக?

45) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை- முடிவுரை

(அல்லது)

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக?

****/****

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com